தில்லைத் திருநடம்

★

தொகுப்பு :

ராய. சொ.

★

வெளியீடு :
மெ. மு.
ட.

தில்லைத் திருநடம்

தொகுப்பு:

ராய. சொ.

மெய்யப்பன் திருமண வெளியீடு.

குரோதி, ஆவணி 5 (20-8-64)

[illegible]ம், மெ. மு.

காரைக்குடி.



உ

சிவமயம்

தில்லைத் திருநடம்

நூல்முகம்

இந்நூலுக்குத் "தில்லைத்திருநடம்" எனப் பெயர் கொடுத்திருக்கிறது. கூத்தப்பெருமான் மீது பாடப்பெற்ற 101 அரிய பாடல்களின் தொகுப்பு நூல் இது. தில்லைக் கூத்தனைப் பற்றி அடியார்கள் பாடிய பாசுரம் ஆயிரம் ஆயிரம். அவற்றுள் பொறுக்குமணிகளாகிய நூற்றொரு பாடல்கள் இந்நூலை அலங்கரிக் கின்றன.

பன்னிரு திருமுறையும் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. 101ல் பன்னிரு திருமுறைப் பாடல் 85. அவற்றுள் ஒன்பதாம் திருமுறைப் பாடல் மட்டுமே 30. இவ் ஒன்பதாம் திரு முறையை ஆக்கிய ஆசிரியர், திருமாளிகைத்

தேவர் தொட்டு, சேந்தனுர் ஈருக, ஒன்பதின்மர். இத்திருமுறைப் பாடலின் மொத்த எண் 301. 301 பாடலில் இந்நூலில் 30 பாடல் உள்ளன. எனவே இந்நூல் பெரிதும் ஒன்பதாம் திருமுறையின் ஒரு தொகுப்பாகவும் அமைந்திருக்கிறது எனக் கொள்ளலாம். இவ் ஒன்பதாம் திருமுறைப் பாடல்கள் திருவாசகத்தைப் போல் இனிப்பவை என்பதைப் படிப்போர் உணர்வர்.

ஆசிரியர் வரிசையிற் பார்க்கும்போது இந்நூலில் அதிகமான பாடல்கள் மணிவாசகப் பெருமானுடையன. மணிவாசகர் பாக்கள் பதினெட்டும், சேக்கிழார் பாடல்கள் பத்தும், இராமலிங்கர் பாடல்கள் பத்தும், அப்பர் பாசுரங்கள் ஒன்பதும் இந்நூலே அழகுசெய்கின்றன. பொன்னம்பலநாதனேப் பற்றிய வில்லிபுத்தூர் ஆழ்வாரின் அரிய பாடல் ஒன்று இந்நூலின் எழிலேப் பெரிது படுத்தி நிற்கின்றது. இருபத்தைந்து அடியார்களின் பாடல்களேக் கொண்டு இந்நூல் விளங்குகின்றது.

30/4

இந்நூலை வெளியிடுகின்றவர், என் அரிய நண்பர்; தெய்வபக்தி நிறைந்தவர்; தில்லைப் பதியில் ஆனந்தக் கூத்து ஆடும் நடராசப் பெருமானிடம் தீராக் காதல் கொண்டவர்; பொதுப்பணி எதிலும் பங்குகொள்ளும் மெய்யன்பர்; சிதம்பரத்தலத்தில் வேத பாடசாலை நிறுவி, சிறப்பாக நடாத்திவருவதோடு, தில்லைப் பெருமானுக்கு நிறைந்த கட்டளைகள் வைத்து, சீரும் சிறப்பும்பெற ஆற்றிவரும் "மெ. செ." குடும்பத்தைச் சேர்ந்தவர்; அவ் அறத்தைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிக் காத்து, வளர்த்து வரும் மெ. செ. ச. மு. மெ. முத்துராமனுர்.

இதனை அன்பர் முத்துராமன், தன் மைந்தன் மெய்யப்பன் திருமண நினைவாக வெளியிட்டுப் புகழ் பெறுகின்ருர். அன்னுர் வாழ்க! அவர் மைந்தனும், மருகியும் எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

ராய. சொ.

30/4

உள் உறை

உள் உறை (தொடர்ச்சி)

செல்வ நெடுமாடம்
சென்று சேண்ஓங்கிச்

செல்வ மதிதோயச்
செல்வம் உயர்கின்ற

செல்வர் வாழ்தில்லைச்
சிற்றம் பலமேய

செல்வன் கழல்ஏத்தும்
செல்வம் செல்வமே.

—சம்பந்தர்.

சேண்: உயரம். மதி: திங்கள். தோய: படிய. சிற்றம் பலம் மேயசெல்வன்: கூத்தப்பெருமான். கழல்: திருவடி.

அலைஆர் புனல்சூடி
ஆகத்து ஒருபாகம்

மலையான் மகளோடு
மகிழ்ந்தான், உலகேத்தச்

சிலையால் எயில்எய்தான்
சிற்றம் பலம்தன்னைத்

தலையால் வணங்குவார்
தலையா னார்களே.

—சம்பந்தர்.

புனல்: கங்கை. ஆகம்: உடம்பு. மலையான் மகள்: பார்வதி. சிலை: மலை வில். எயில்: கோட்டை. தலையானார்கள்: மேலோர்கள்.

ஆரூர், தில்லைஅம்பலம், வல்லம், நல்லம்,
வடகச்சியும், அச்சிறு பாக்கம், நல்ல

கூரூர், குடவாயில், குடந்தை, வெண்ணி,
கடல்சூழ் கழிப்பாலை, தென்கோடி, பீடார்

நீரூர், வயல்நின்றி யூர்,குன்றி யூரும்,
குருகாவை யூர்.நாரை யூர்,நீடு கானப்

பேரூர், நல்நீள் வயல்நெய்த் தானமும்,
பிதற்றுய்; பிறைசூடி தன்பே ரிடமே.

—சம்பந்தர்.

தில்லைஅம்பலம்: சிதம்பரம். பீடு: பெருமை. பிறைசூடி: சிவபெருமான். இப்பாடலில் பல தலங்கள் கூறப் பெற்றிருக்கின்றன.

வேயி ஞர்பணைத் தோளியோடு ஆடலை
வேண்டி ஞய்;விகிர் தா!உயிர் கட்குஅமுது

ஆயி ஞய்;இடு காட்டுளரிஆடல்அ மர்ந்தவனே!

தீயி ஞர்கணை யால்புர மூன்றெய்த
செம்மை யாய்;திகழ் கின்றசிற் றம்பலம்

மேயி ஞய்;கழ லேதொழுது எய்துதும் மேலுலகே
—சம்பந்தர்.

வேய்: மூங்கில். பணை: பருத்த. தீயிஞர்கணை: நெருப் பைக்கக்கும் அம்பு. மேயிஞய்: பொருந்திஞய்.

பாலனாய் விருத்தன் ஆகிப்
பனிநிலா எறிக்கும் சென்னி,

காலனைக் காலால் காய்ந்த
கடவுளார் விடைஒன்று ஏறி,

ஞாலமாம் தில்லை தன்னுள்
நவின்றசிற் றம்ப லத்தே

நீலம்சேர் கண்ட னார்தாம்
நீண்டுஎரி ஆடும் ஆறே.

—அப்பர்.

பனி: குளிர்ந்த. ஞாலம்ஆம்தில்லை: உலகில் சிறந்த சிதம்பரம். நீலம்: விடம் எரி: நெருப்பு.

நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி யாதே

வஞ்சமே செய்தி யாலோ!
வானவர் தலைவ னேநீ

மஞ்சடை சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப லத்தே

அஞ்சொலாள் காண நின்றே
அழக!நீ ஆடும் ஆறே.

—அப்பர்.

நினைக்குமா: எண்ணும் ஆற்றல். நினைப்பியாதே: நினைக்கச் செய்யாமல். மஞ்சு: மேகம். அம்சொலாள்: அழகிய பேச்சினை உடைய உமையவள்.

தெரித்த கணையால் திரிபுரம்
மூன்றும்செந் தீயின்மூழ்க

எரித்த இறைவன் இமையவர்
கோமான் இணைஅடிகள்

தரித்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்

சிரித்த முகம்கண்ட கண்கொண்டு
மற்றுஇனிக் காண்பதுஎன்னே!

—அப்பர்.

தெரித்த: ஆராய்ந்த. கணை: அம்பு. இணை: இரண்டு.
தரித்த: அணிந்துகொண்ட.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயில் குமிண்சிரிப்பும்

பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்

இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவ-
தேஇந்த மாநிலத்தே.

—அப்பர்

கொவ்வைச் செவ்வாய்: கொவ்வைப் பழம் போன்ற சிவந்தவாய். குமிண்சிரிப்பு: புன்சிரிப்பு. இனித்தம்: தித்திப்பு.

சாட எடுத்தது தக்கன்தன்
வேள்வியில் சந்திரனை;

வீட எடுத்தது, காலனை;
நாரணன் நான்முகனும்

தேட எடுத்தது; தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்

ஆட எடுத்திட்ட பாதம்அன்-
றோ,நம்மை ஆட்கொண்டதே.

—அப்பர்.

வீட: வீழ. நாரணன்: திருமால். நான்முகன்: பிரமன்.

அல்லல் என்செயும்!
அருவினை என்செயும்!

தொல்லை வல்வினைத்
தொந்தம்தான் என்செயும்!

தில்லை மாநகர்ச்
சிற்றம் பலவனுர்க்கு

எல்லை இல்லதோர்
அடிமைபூண் டேனுக்கே.

—அப்பர்.

அல்லல்: துன்பம். தொல்லை: பழைய. தொந்தம்: கட்டு.

தீர்த்த னைச்சிவ-
-னைச்சிவ லோகனை,

மூர்த்தி யைமுத-
-லாய ஒருவனைப்

பார்த்த னுக்குஅருள்-
-செய்தசிற் றம்பலக்

கூத்த னைக்கொடி-
-யேன்மறந்து உய்வனே!

—அப்பர்.

தீர்த்தன்: புனிதமானவன். உய்வனே: கடைத்தேறு வேனே.

அருந்தவர்கள் தொழுதுஏத்தும் அப்பன் தன்னை,
அமரர்கள்தம் பெருமானை, அரனை, மூவா

மருந்துஅமரர்க்கு அருள்புரிந்த மைந்தன் தன்னை,
மறிகடலும், குலவரையும், மண்ணும், விண்ணும்,

திருந்துஒளிய தாரகையும், திசைகள் எட்டும்,
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவும் ஆய,

பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

—அப்பர்.

மூவா மருந்து: முதிர்ச்சிபெருமையை நல்கும் அமுதம். மறி கடல்: அலைகடல். தாரகை: நட்சத்திரம். பெரும்பற்றப் புலியூர்: சிதம்பரம்.

இறந்தார்க்கும், என்றும் இறவா தார்க்கும்,
இமையவர்க்கும், ஏகமாய் நின்று சென்று,

பிறந்தார்க்கும், என்றும் பிறவா தார்க்கும்,
பெரியான்தன் பெருமையே பேச நின்று

மறந்தார் மனத்துஎன்றும் மருவார் போலும்
மறைக்காட்டு உறையும் மழுவாள் செல்வர்

புறந்தார் சடைதாழப் பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.

—அப்பர்.

என்றும் இறவாதார்: புகழுடம்பு நிறுவியோர். ஏகமாய்: தனித்து. என்றும் பிறவாதார்: பிறவிப் பெருங்கடல் நீந்தினர். மருவார்: வரமாட்டார். மறைக்காடு: வேதாரண்யம். புறம்: பின்பக்கம். தார்: மாலை. தாழ: தங்க. பூதம்: பூதகணம் புலியூர்: சிதம்பரம்.

கருமைஆர் தருமனூர் தமர்நம்மைக்
கட்டியகட்டு அறுப்பிப் பானை,

அருமையாம் தன்உலகம் தருவானை,
மண்உலகம் காவல் பூண்ட

உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்

பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றும் அன்றே,

—சுந்தரர்.

கருமையார் தருமனூர்தமர்: கறுப்புநிறம் வாய்ந்த எம தூதர். கட்டு: எமபாசம். பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை: பல்லவர்க்குக் கப்பம் கட்டாத அரசர்களை. மறுக்கம் செய்யும்: தண்டிக்கும் பெருமையார். பெருமையுடையார் வாழும்.

ஆடு கின்றிலை; கூத்துடை-
-யான்கழற்கு அன்பிலை; என்புஉருகிப்

பாடு கின்றிலை; பதைப்பதும்
செய்கிலை; பணிகிலை; பாதமலர்

சூடு கின்றிலை; சூட்டுகின்-
-றதுமிலை; துணியிலி பிணநெஞ்சே!

தேடு கின்றிலை; தெருவுதோறு
அலறிலை; செய்வதொன்று அறியேனே.

—மணிவாசகர்.

ஆடுகின்றிலை: ஆடமாட்டேன் என்கிறாய். கழல்: திருவடி. பதைத்தல்: துடித்தல். பணிதல்: வணங்குதல். சூடுதல்: அணிதல். சூட்டுதல்: அருச்சித்தல். அலறுதல்: உரக்கச் சொல்லுதல்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை;
சங்கரா, போற்றி! வான

விருத்தனே; போற்றி! எங்கள்
விடலையே, போற்றி! ஒப்பில்

ஒருத்தனே, போற்றி! உம்பர்
தம்பிரான், போற்றி! தில்லை

நிருத்தனே, போற்றி! எங்கள்
நின்மலா, போற்றி! போற்றி!

—மணிவாசகர்.

தரிக்கிலேன்: பொறுக்கமாட்டேன். காயம்: உடம்பு.

எம்பிரான் போற்றி! வானத்து
அவரவர் ஏறு போற்றி!

கொம்பரார் மருங்குல் மங்கை
கூற,வெண் நீற! போற்றி!

செம்பிரான் போற்றி! தில்லைச்
திருச்சிற்றம் பலவ போற்றி!

உம்பரா போற்றி! என்னை
ஆள்உடை ஒருவ போற்றி!

—மணிவாசகர்

கொம்பர் ஆர்மருங்குல்: கொம்பு போன்ற இடை
செம்பிரான்: செம்மேனியை உடைய தலைவன்.

காதுஆர் குழை ஆட,
    பைம்பூண் கலன்ஆட,
கோதை குழல்ஆட,
    வண்டின் குழாம்ஆட,
சீதப் புனல்ஆடி,
    சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி,
    அப்பொருள்ஆ மாபாடி,
சோதி திறம்பாடி,
    சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி,
    அந்தம்ஆம் ஆபாடி,
பேதித்து நம்மை
    வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி,
    ஆடேல்ஓர் எம்பாவாய்!

—மணிவாசகர்.

குழை: தோடு. கலன்: நகை. கோதை: மாலை. குழல்: கூந்தல். ஆம்ஆ: ஆகும்விதம். பேதித்து: வேறு படுத்தி.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி,
மத்தமும் பாடி மதியும்பாடி,

சிட்டர்கள் வாழும்தென் தில்லைபாடி,
சிற்றம் பலத்துஎங்கள் செல்வம்பாடி,

கட்டிய மாசுணக் கச்சைபாடி,
கங்கணம் பாடி, கவித்தகைம்மேல்

இட்டுநின்று ஆடும் அரவம்பாடி,
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

—மணிவாசகர்.

மத்தம்: ஊமத்தம் பூ. சிட்டர். உயர்ந்தோர். செல்வம்: நடமாடும் தெய்வம். மாசுணம்: பாம்பு. கச்சை: அரைக்கச்சு. கங்கணம்: காப்பு இட்டு நின்று ஆடும் அரவம்: மேல்நின்று ஆடும் பாம்பு. இடுப்பிலும், கையிலும் பாம்பு அணி. முடிய கையின்மேல் பாம்புத் தலை ஆடுகின்றது.

திணைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணுதே

நினைத்தொறும், காண்தொறும்,
பேசும்தொறும், எப்போதும்

அனைத்துஎலும்பு உள்நெக
ஆனந்தத் தேன்சொரியும்

குனிப்புடை யானுக்கே
சென்றுஊதாய் கோத்தும்பி

—மணிவாசகர்.

திணைத்தனை: திணையளவு. உண்ணுதே: உண்ணுமல். அனைத்து எலும்பு உள்நெக: எல்லா எலும்புகளும் உள்ளே உருக. குனிப்பு: கூத்து. "ஏரார்மலர் எல்லாம்" என்ற மங்கைமன்னன் பாசுரம் இதனோடு ஒத்தது.

பொய்யாய செல்வத்தே
புக்குஅழுந்தி நாள்தோறும்

மெய்யாக் கருதிக்
கிடந்தேனை ஆட்கொண்ட

ஐயா!என் ஆர்உயிரே!
அம்பலவா! என்றுஅவன்தன்

செய்யார் மலர்அடிக்கே
சென்றுஊதாய்! கோத்தும்பி!

—மணிவாசகர்.

மெய்யாக் கருதி: அப்பொய்ப்பொருளையே மெய்எனக் கொண்டு. செய்ஆர்: செம்மைநிறைந்த.

குலம்பாடிக் கொக்குஇறகும்
பாடிக் கோல்வளையாள்

நலம்பாடி நஞ்சுண்ட-
-வாபாடி நாள்தோறும்

அலம்புஆர் புனல்தில்லை
அம்பலத்தே ஆடுகின்ற

சிலம்புஆடல் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ!

—மணிவாசகர்.

குலம்: உயர்ச்சி. கொக்கு இறகு: சிவன் தலையிலிருப்பது. கோல்வளை: சங்குவளையல்.

தென்பால் உகந்துஆடும்
தில்லைச்சிற் றம்பலவன்

பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடி?

பெண்பால் உகந்திலனேல்,
பேதாய்! இருநிலத்தோர்

விண்பால் யோகுஎய்தி
வீடுவர்காண்; சாழலோ!

—மணிவாசகர்

தென்பால்: தெற்குப் பக்கம்பார்த்து. உகந்து: விரும்பி. பெண்பால்: பெண்பக்கத்தை. காண்ஏடி: அடியே பார்.

வணங்கத் தலைவைத்து
வார்கழல்வாய் வாழ்த்தவைத்து

இணங்கத்தன் சீர்அடியார்
கூட்டமும்வைத்து எம்பெருமான்

அணங்கொடு அணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற

குணங்கூரப் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ!

—மணிவாசகர்.

வார்கழல் என்பதை அரிமா நோக்காக தலைக்கும் வாய்க்கும் கொள்க. வார்கழல் வணங்கத் தலைவைத்து. வார்கழல் வாழ்த்த வாய் வைத்து என்று. வார்கழல்: வீரச்சிலம்பு அணிந்த பாதம். இணங்க: கலப்பதற்கு. தன்சீர்அடியார்: சிவனடியார். அணங்கொடு: சிவகாமி அம்மையொடு. குணம்: அருட்குணம். கூர: மிக.

அரசே! பொன்னம் பலத்தாடும்
அமுதே! என்றுஉன் அருள்நோக்கி,

இரைதேர் கொக்குஒத்து இரவுபகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்;

கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துஉன் அடியேன்பால்

பிரைசேர் பாலில் நெய்போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ.

—மணிவாசகர்.

இரை: உணவு. தேர்தல்: ஆராய்தல். பிரைசேர்பால்: உறைஊற்றிய பால்.

சிரிப்பார்; களிப்பார்; தேனிப்பார்;
திரண்டு திரண்டுஉன் திருவார்த்தை

விரிப்பார்; கேட்பார்; மெச்சுவார்;
வெவ்வேறு இருந்துஉன் திருநாமம்

தரிப்பார்; பொன்அம் பலத்துஆடும்
தலைவா! என்பார்; அவர்முன்னே

நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?
நம்பி! இனித்தான் நல்காயே!

—மணிவாசகர்.

களிப்பார்: மகிழ்வார். தேனிப்பார்: இனிப்புப் பெறுவார்.
திருவார்த்தை: புகழ்ப்பேச்சு. நரிப்பு: இகழ்ச்சி.

நல்காது ஒழியான் நமக்குஎன்றுஉன்
நாமம் பிதற்றி, நயனநீர்

மல்கா, வாழ்த்தா, வாய்குழறு,
வணங்கா, மனத்தால் நினைந்துஉருகி,

பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலம்என்றே

ஒல்கா நிற்கும் உயிர்க்குஇரங்கி
அருளாய்! என்னை உடையானே!

—மணிவாசகர்

பிதற்றி: பலகாலும்சொல்லி. நயனநீர்மல்க: கண்ணீர் பெருக்கி. வாழ்த்தா: வாழ்த்தி. வாய்குழறு: வாய் குழறி வணங்கா: வணங்கி. பல்கால்: பலமுறையும். பாவித்து: எண்ணி. ஒல்கா: தளர்ந்து.

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்துஎன் உளம்மன்னிக்

கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட

திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை

அருத்தியினால் நாய்அடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே

—மணிவாசகர்

உருத்தெரியாக்காலத்தே: என் உடம்பு உருவாவதற்கு முன்னமே. உள்புகுந்து: என் தாயாரின் கருப்பையிலே நுழைந்து. என் உளம்மன்னி: கருவாக உருவெடுக்கும்போதே என் உள்ளத்தில் நிலை பெற்று. கருத்திருத்தி: கருவைத்திருத்தமாக்கி. திருத்துருத்தி: ஒரு தேவாரத்தலம் அருத்தி: ஆசை.

வன்புலால் வேலும் அஞ்சேன்!
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்!

என்புஎலாம் உருக நோக்கி
அம்பலத்து ஆடு கின்ற

என்பொலா மணியை எத்தி
இனிதுஅருள் பருக மாட்டா

அன்புஇலா தவரைக் கண்டால்
அம்ம!நாம் அஞ்சும் ஆறே!

—மணிவாசகர்.

வன்புலால்வேல்: புலால் கமழும் வலியவேலாயுதம். வளைக்கையர்: வளையல்பூண்ட கையையுடைய நங்கைமார். பொலாமணி: துளைக்கப்படாத இரத்தினம்.

கோவே! அருள வேண்டாவோ?
கொடியேன் கெடவே அமையுமே?

'ஆ!வா!' என்று விடில்என்னை
'அஞ்சேல்' என்பார் ஆரோதான்?

சாவார் எல்லாம் என்அளவோ?
'தக்க ஆறுஅன்று' என்னுரோ?

தேவே! தில்லை நடம்ஆடி!
திகைத்தேன்; இனித்தான் தேற்றுயே!

—மணிவாசகர்.

கோவே: தலைவனே. அமையுமே: பொருந்துவதாகுமா.

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்-
-பலத்தும்என் சிந்தைஉள்ளும்

உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்

துறைவாய் நுழைந்தனை யோ?அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ?

இறைவா! தடவரைத் தோட்குஎன்கொ-
-லாம்புகுந்து எய்தியதே?

—மணிவாசகர்.

(திருக்கோவை)

சிறை: பாதுகாப்பு. கூடல்: மதுரைமாநகரம். ஒண்தீந்தமிழ்: ஒளிமிக்க இனிக்கும் தமிழ். துறை: அகவழி. சூழல்: கூட்டம்.

நிருத்தம் பயின்றவன் சிற்றம்-
-பலத்துநெற் றித்தனிக்கண்

ஒருத்தன் பயிலும் கயிலை
மலையின் உயர்குடுமித்

திருத்தம் பயிலும் சுனைகுடைந்து
ஆடிச் சிலம்புஎதிர்கூய்

வருத்தம் பயின்றுகொல் லோ?வல்லி
மெல்லியல் வாடியதே!

—மணிவாசகர்.
(திருக்கோவை)

நிருத்தம்: நடனம். தனிக்கண்: ஒப்பற்ற ஒரு கண். குடுமி: சிகரம். சுனை: நீர்நிலை. சிலம்பு: மலை.

ஒளிவளர் விளக்கே! உலப்புஇலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்துஓர் உணர்வே!

தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடுஅரங்கு ஆக,

வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

—திருமாளிகைத் தேவர்

உலப்பு: கேடு. வெளி: ஆகாயம். விளம்புமா: விளம்புமாறு.

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருள்பிழம்பு அறஎறிந்து எழுந்த

சுடர்மணி விளக்கின் உள்ஒளி விளங்கும்
தூயநஜ் சோதியுள் சோதீ!

அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனெடு மால்அறி யாமைப்

படர்ஒளி பரப்பிப் பரந்துநின் ருயைத்
தொண்டனேன் பணியுமா பணியே!

—திருமாளிகைத் தேவர்

இருட்பிழம்பு: இருள்கூட்டம். அறஎறிந்து: முற்றும் ஒழித்து. அடல்: ஆற்றல். பரந்து: விரிந்து பணியுமா: பணியும் ஆற்ருல்.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்கு
அருள்புரி வள்ளலே! மருளார்

இடங்கொள்முப் புரம்வெந்து அவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே!

அடங்கவல் அரக்கன் அருள்திரு வரைக்கீழ்
அடர்த்தபொன் அம்பலத்து அரசே!

விடங்கொள்கண் டத்துஎம் விடங்கனே! உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே!

—திருமாளிகைத் தேவர்

மடங்கல்: நரசிங்கம். கனகன்: இரணியன். கீண்டான்: பிளந்த திருமால். மருள்: மயக்கம். வெந்து அவிய: வெந்துநீருகும் படி. வைதிகத்தேர்: வேதத்தொடர்புடைய தேர். வல்லரக்கன்: இராவணன். அருட்திருவரை: கயிலைமலை.

கருவளர் மேகத்து அகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந்து எங்கும்

பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்

திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!

உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்அடிக் கீழதுஎன் உயிரே.

—திருமாளிகைத்தேவர்

கருவளர்: கருமை மிகுந்த. அகடு: நடு. கனகம்: தங்கம். திருவளர் தெய்வப்பதி: எழில் மிகுந்த தெய்வ நகரம். வதிநிதியம் திரண்ட: செல்வம் திரண்டுதங்கிய.

திருநெடு மால்,இந் திரன்,அயன், வானோர்
திருக்கடைக் காவலில் நெருக்கிப்

பெருமுடி மோதி உகுமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்

செருநெடு மேரு வில்லின்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்தா!

கருவடி குழைக்காது அமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததுஎன் கருத்தே

—திருமாளிகைத் தேவர்

திருக்கடைக்காவல்: கோயில்படி. உகுமணி: சிந்திய இரத்தினங்கள். முன்றில்: முற்றம் செரு: போர். வில்லின்: வில்லினால். கருவடி: பிறவிக்கடலை வற்ற வைக்கும்.

கானே வருமுரண் ஏனம்எய்த,
களியார் புளினநல் காளாய்!எனும்;

வானே தடவும் நெடும்குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த

தேனே! எனும்;தெய்வ வாய்மொழியார்
திருவளர் மூவா யிரவர்தெய்வக்

கோனே! எனும்;குணக் குன்றே!எனும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

—திருமாளிகைத் தேவர்

இது,தாயார்கூற்று. கான்:காடு. முரண்: வலிய. ஏனம்: பன்றி. புளினன்: வேடன். காளாய்: காளையே. எனும்: என்று சொல்லுவாள். தெய்வ வாய் மொழி யார்: கடவுள் பேச்சுப் பேசுகின்றவர்.

இவ்அரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த

ஐவரும் பகையே; 'யார்துணை' என்றால்
அஞ்சல்என்று அருள்செய்வான் கோயில்,

கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் கடைதரு நீலம்

செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

—கருவூர்த் தேவர்

பிறவிப் பௌவம்: பிறப்பு என்னும் கடல். என்னுடன் பிறந்த ஐவர்: மெய் வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்கள். அஞ்சல்: பயப்படாதே. பழனம்: வயல்.

கண்பனி அரும்பக் கைகள்மொட் டித்துஎன்
கனகணே ஓலம்என்று ஓலிட்டு

என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
என்னையும் புணர்ப்பவன் கோயில்,

பண்பல தெளிதேன் பாடிநின் றுடைப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்

செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

—கருவூர்த்தேவர்

கண்பனிஅரும்ப: கண்ணீர்சோர. மொட்டித்து: குவித்து. கனகண்: பற்றுக்கோடு. ஓலம்: அபயம். ஓலிட்டு: அலறி. புணர்ப்பவன்: சேர்ப்பவன். பண்: இசை. தேன்: வண்டு. மொழுப்பு: இடம்.

பின்னுசெஞ் சடையும், பிறைதவழ் மொழுப்பும்,
பெரியதம் கருணையும் காட்டி,

அன்னதேன் கலந்துஇன் அமுதுஉகந்து அளித்தாங்கு
அருள்புரி பரமர்தம் கோயில்,

புன்னைதேன் சொரியும் பொழில்அகம் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்

தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

—கருவூர்த்தேவர்

பிறைதவழ் மொழுப்பு: திங்கள் தங்கிய முடி. புன்னை: புன்னைப்பூ.
பொறி: புள்ளி. வரி: கோடு.

அல்லிஅம் பூம்பழனத்து
ஆமூர்நா வுக்குஅரசைச்

செல்ல நெறிவகுத்த
சேவகனே! தென்தில்லைக்

கொல்ஐ விடைஏறி
கூத்துஆடு அரங்காகச்

செல்வம் நிறைந்தசிற்
றம்பலமே சேர்ந்தனையே.

—பூந்துருத்தி நம்பி காடநம்பி

ஆமூர்: நாவுக்கரசர் பிறந்தருளிய திருஆமூர். கொல்ஐ விடை: கொல்லுதல்வல்ல அழகிய காளை.

எம்பந்த வல்வினைநோய்
தீர்த்திட்டு எமைஆளும்

சம்பந்தன் காழியர்கோன்
தன்னையும்ஆட் கொண்டருளி,

அம்புந்து கண்ணாளும்
தானும் அணிதில்லைச்

செம்பொன்செய் அம்பலமே
சேர்ந்திருக்கை ஆயிற்றே

—பூந்துருத்திநம்பிகாடநம்பி

பந்தம்: கட்டு. காழியர்கோன்: சீர்காழிக்கு அரசனாகிய சம்பந்தன். அம்புஉந்துகண்ணாள்: கணைபோன்ற விழியையுடைய உமையாள்.

களையா உடலோடு
சேரமான் ஆரூரன்

விளையா மதம்ஆரு
வெள்ளானை மேல்கொள்ள

முளையாம் மதிசூடி
மூவா யிரவரொடும்

அளையா விளையாடும்
அம்பலம்நின் ஆடரங்கே.

—பூந்துருத்திநம்பிகாடநம்பி

களையா: நீங்காத. சேரமான்: சேரமான் பெருமாள் நாயனார். ஆரூரன்: சுந்தரமூர்த்திகள். முளையாம்மதி: முளைத்த சந்திரன். மூவாயிரவர்: தில்லைமூவாயிரவர். அளையா: கலந்து.

முத்தீ யாளர் நாலு மறையர்
மூவா யிரவர்நின்னோடு

ஒத்தே வாழும் தன்மை யாளர்
ஓதிய நான்மறையைத்

தெத்தே என்று வண்டு பாடும்
தென்தில்லை அம்பலத்துள்

அத்தா! உன்தன் ஆடல் காண
அணைவதும் என்றுகொலோ?

—கண்டராதித்தர்

தெத்தே: ஒலிக்குறிப்பு. அத்தன்: தலைவன். அணைவது: சேர்வது.

மானைப் புரையும் மடமென் னேக்கி
மாமலை யாளோடும்

ஆன்அஞ்சு ஆடும் சென்னி மேலோர்
அம்புலி சூடும்அரன்

தேனைப் பாலைத் தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துக்

கோனை,ஞானக் கொழுந்து தன்னைக்
கூடுவது என்றுகொலோ?

—கண்டராதித்தர்

மானைப்புரையும்: மானை ஒத்த. மடமெல் நோக்கி: இளைய மெல்லிய பார்வையுடையவள். ஆன்அஞ்சு: பசுவின் ஐந்து பொருள்.

களிவான் உலகில் கங்கை நங்கை
காதல னே!அருள்என்று

ஒளிமால் முன்னே வரம்கி டக்க,
உன்அடி யார்க்குஅருளும்

தெளிவுஆர் அமுதே! தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துள்

ஒளிவான் சுடரே! உன்னை நாயேன்
உறுவதும் என்றுகொலோ?

—கண்டராதித்தர்

களிவான் உலகு: களித்தற்குரிய விண்ணுலகம். கங்கைநங்கைகாதலன்: கங்கையாளுக்கு மணாளன். மால்: திருமால். உறுவது: அடைவது.

பாரார் முழுதும் வந்துஇ றைஞ்சப்
பதஞ்சலிக்கு ஆட்டுஉகந்தான்

வாரார் முலையாள் மங்கை பங்கன்
மாமறை யோர்வணங்கச்

சீரால் மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்து ஆடுகின்ற

காரார் மிடற்றுஎங் கண்ட னுரைக்
காண்பதும் என்றுகொலோ?

—கண்டராதித்தர்

பாரார்: உலகத்தார். வார்: கச்சு. சீர்: சிறப்பு. கார்
கருநிறம். மிடறு: கழுத்து.

நின்றுநினைந்து இருந்துகிடந்து
எழுந்துதொழும் தொழும்பனேன்

ஒன்றிஒருகால் நினையாது
இருந்தாலும் இருக்கவொட்டாய்;

கன்றுபிரி கற்றுப்போல்
கதறுவித்தி; வரவுநில்லாய்;

நன்றுஇதுவோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

—வேணாட்டடிகள்.

தொழும்பன்: தொண்டன். கற்று: கன்றையுடைய பசு. கதறுவித்தி: அலறச் செய்கின்றாய். வரவுநில்லாய்: வந்து எதிர்நிற்கமாட்டாய்.

மண்ணோடு விண்அளவும்
மனிதரொடு வானவர்க்கும்

கண்ணவாய்; கண்ஆகாது
ஒழிதலும்,நான் மிகக்கலங்கி

அண்ணவோ! என்றுஅண்ணுந்து
அலமந்து விளித்தாலும்

நண்ணயால்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே.

—வேணாட்டடிகள்

கண்ஆகாது ஒழிதலும்: எனக்குக் கண்ணகாது நீங்கு தலும். அலமந்து: வருந்தி. விளித்தாலும்: அழைத் தாலும். நண்ணய்: வரமாட்டாய்.

''பாவார்ந்த தமிழ்மாலை
பத்தர்அடித் தொண்டன்எடுத்து

ஓவாதே அழைக்கின்றான்''
என்றுஅருளி நன்றுமிகத்

தேவே! தென் திருத்தில்லைக்
கூத்தாடீ! நாய்அடியேன்

சாவாயும் நினைக்காண்டல்
இனிஉனக்குத் தடுப்பஅரிதே!

—வேணாட்டடிகள்

பாவார்ந்த தமிழ் மாலை: பாவடிவில் அமைந்த தமிழ் வரிசை. ஓவாதே: இடையறாமல். சாவாயும்: சாகும் பொழுதும்.

தொறுக்கள் வான்கமல மலர்உழக்கக்
கரும்புநற் சாறு பாய்தர

மறுக்க மாய்அக் கயல்கள்
மடைபாய் தில்லை அம்பலவன்

முறுக்கு வாசிகை தன்னொடு
முகிழ்த்த மொட்டொடு மத்தமும்

பிறைக்கொள் சென்னி அன்றே
பிரியாது என்னுள் நின்றனவே.

—திருவாலியமுதனர்

தொறுக்கள்: பசுக்கூட்டங்கள். வான்: சிறந்த. உழக்க: கலக்க. மறுக்கமாய்: மயங்கி. கயல்கள்: மீன்கள். வாசிகை: மாலை. மத்தம்: ஊமத்தம்பூ.

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே!
　　அணிதில்லை நகர்ஆளீ!
சிலந்தி யைஅரசு ஆள்கஎன்று அருள்செய்த
　　தேவ!தே வீசனே!
உலந்த மார்க்கண்டிக்கு ஆகிஅக் காலனை
　　உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல்ஒற்ற
　　வந்துஅருள் செய்யாயே.

—திருவாலியமுதனார்

அலந்துபோயினேன்: வருந்திவிட்டேன். தில்லைநகர் ஆளீ!: தில்லையை ஆள்பவனே! சிலந்தியை: சிலந்திப்பூச்சியை. (சிலந்திதான் கோச்செங்கட் சோழனாக அரசாண்டது) உலந்த: வருந்திய. மார்க் கண்டி: மார்க்கண்டன். உயிர்செக: உயிர்நீங்க. உதைகொண்ட: உதைத்த. வனம்: அழகு. இது காதலி கூற்று.

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்

தென்னன் தமிழும், இசையும் கலந்த
சிற்றம் பலம்தன்னுள்

பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு

மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

—திருவாலியமுதனார்

அவர்கள்: அந்தப் பெண்கள். பொன்னும் மணியும் நிரந்த தலம்: தங்கத்தில் இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற சபை. பியல்: பிடரி.

கூத்தனை, வானவர்தம் கொழுந்தை,
கொழுந்தாய் எழுந்த

மூத்தனை, மூஉருவின் முதலை,
முதலாகி நின்ற

ஆத்தனை, தான்படுக்கும் அந்தணர்
தில்லைஅம் பலத்துள்

ஏத்தநின்று ஆடுகின்ற எம்பி-
-ரான்அடி சேர்வன்கொலோ?

—திருவாலியமுதனார்

மூத்தனை: முத்தவனை. மூஉருவின்முதலை: மும்மூர்த்தி
களின் முதற்பொருளை. ஆத்தனை: தலைவனை.

பாரணி நறுமலர் வண்டு கெண்டு
பஞ்சமம் செண்பக மாலைமாலை

வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந்து இவைநம்மை மயக்கும்ஆலோ!

சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கும்
தில்லைஅம் பலத்துஎங்கள் செல்வன்வாரான்;

ஆர்எனை அருள்புரிந்து அஞ்சல் என்பார்!
ஆவியின் பரம்என்தன் ஆதரவே

—புருடோத்தமநம்பி

பஞ்சமம்: ஒருவகைப்பண். வார்: கச்சு. வனம்: எழில். மெலியும் வண்ணம்: வருந்துமாறு. வாரான்: வரமாட்டான். பரம்: சுமை. இது தலைவி கூற்று.

வானவர்கள் வேண்ட
வளர்நஞ்சை உண்டார்தாம்

ஊனமிலா என்கை
ஒளிவளைகள் கொள்வாரோ?

தேன்நல்வரி வண்டறையும்
தில்லைச்சிற் றம்பலவர்

நான்நமரோ என்றுதே
நாடகமே ஆடுவரே

—புருடோத்தமநம்பி

ஊனமிலா: குறைவில்லாத, அதாவது பிறர்தீண்டாத. நமர்: நம்மவர். இதுவும் தலைவி கூற்று.

காணீரே! என்னுடைய
கைவளைகள் கொண்டார்தாம்

சேணுர் மணிமாடத்
தில்லைச்சிற் றம்பலவர்,

பூணுர் வனமுலைமேல்
பூஅம்பால் காமவேள்

ஆண்ஆடு கின்றவா
கண்டும் அருளாரே.

—புருடோத்தமநம்பி

காணீரே!: பாருங்கள். சேண்: விண்ணுலகம். பூண்: ஆபரணம். பூ அம்பு. மலர்க்கணை. காமவேள்: மன்மதன். ஆண்ஆடுகின்றவா: ஆண்மையைப் பயன்படுத்துவதை. இதுவும் தலைவி கூற்று.

சேல்உ லாம்வயல்
தில்லைஉ ளீர்!உமைச்

சால நாள்அயல்
சார்வதி னுல்இவள்

வேலை ஆர்விடம்
உண்டுஉகந் தீர்என்று

மால தாகும்என்
வாள்நு தல்லே!

—சேதிராயர்

சேல்: மீன். சாலநாள்: நீண்டநாள். அயல்: பக்கம். மாலதாகும்: மயங்கும். என்வாள்நுதல்: என்ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண். இது தாயார் கூற்று.

விம்மி விம்மியே
வெய்துயிர்த் தாள்என

உம்மை யேநினைந்து
ஏத்தும்ஒன் ருகிலள்

செம்ம லோர்பயில்
தில்லைஉ ளீர்!எங்கள்

அம்மல் ஓதி
அயர்வு உறும்மே!

—சேதிராயர்

வெய்துயிர்த்தாள்: பெருமுச்சு விட்டாள். ஏத்தும்: பாராட்டுவாள். ஒன்ருகிலள்: ஒன்றுக்கும் உதவாதவள் ஆகிவிட்டாள். செம்மலோர்: சீரியோர். அம்: அழகிய. மல்: வளம் பொருந்திய. ஓதி:கூந்தலை யுடையாள். இதுவும் தாயார் கூற்று.

மன்னுக தில்லை; வளர்கநம் பத்தர்கள்;
வஞ்சகர் போயகல;

பொன்னின்செய் மண்டபத்து உள்ளே புகுந்து
புவனிஎல் லாம்விளங்க;

அன்ன நடைமட வாள்உமை கோன்அடி-
-யோமுக்கு அருள்புரிந்து

பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே,

—சேந்தனார்

மன்னுக: நிலைபெறுக. புவனி: உலகம். பின்னைப்பிறவி: மேல்வரும் பிறப்பு: நெறிதந்த: வழிகாட்டிய. பித்தற்கு: சிவபெருமானுக்கு.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்

மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்-
-பலமே இடமாகப்

பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

—சேந்தனர்

பாலகன்: கௌதம முனியின் மைந்தன் உபமன்யு. மன்னிய: நிலைபெற்ற. ஆலிக்கும்: மறைகளை ஒலிக்கும் இடமாகப்பாலித்து: இடமாகக்கொண்டு.

தேவர், அசுரர்,நரர்
சித்தர்,வித் யாதரர்

மூவர்கள், ஆதியின்
முப்பத்து மூவர்கள்,

தாபதர், சத்தர்,
சமயம், சராசரம்

யாவையும் ஆடிடும்
எம்இறை ஆடவே.

—திருமூலர்

கூத்தப்பெருமான் நடனமாட, தேவர் உள்ளிட்ட அனை வரும், அகிலாண்ட சராசரமும் ஆடும் என்பது கருத்து.

இடங்கொண்ட சத்தியும்
எந்தை பிரானும்

நடங்கொண்டு நின்றமை
நானும் அறிந்தேன்;

படங்கொடு நின்றஇப்
பல்உயிர்க்கு எல்லாம்

அடங்கலும் தாமாய்நின்று
ஆடுகின் றாரே.

—திருமூலர்

இடம்கொண்ட சத்தி: இடப்பாகம் குடிகொண்ட அம்பிக்கை படம் கொடு: வடிவெடுத்து.

மாணிக்கக் கூத்தனை,
வண்தில்லைக் கூத்தனைப்

பூணுற்ற மன்றுள்
புரிசடைக் கூத்தனைச்

சேணுற்ற சோதிச்
சிவானந்தக் கூத்தனை,

ஆணிப்பொற் கூத்தனை
யார்உரைப் பாரே!

—திருமூலர்

வண்: வளம்பொருந்திய. மன்று: சபை. புரி: முறுக்கு. சேண்: நெடுந்தூரம். ஆணிப்பொன்: மாற்றுயர்ந்த தங்கம். யார் உரைப்பார்: யாரால் சொல்ல முடியும்.

அம்பலம் ஆவது
அகில சராசரம்;

அம்பலம் ஆவது
ஆதிப் பிரான்அடி;

அம்பலம் ஆவது
அப்புத்தீ மண்டலம்;

அம்பலம் ஆவது
அஞ்சுஎழுத்து ஆமே.

—திருமூலர்

அம்பலம்: சபை. அகிலசராசரம்: எல்லா உலகும். அப்பு: நீர். அஞ்சு எழுத்து: சிவாயநம.

புளிக்கண் டவர்க்குப்
புனல்ஊறு மாபோல்

களிக்கும் திருக்கூத்துக்
கண்டவர்க்கு எல்லாம்;

துளிக்கும் அருள்கண்ணீர்;
சோர்நெஞ்சு உருக்கும்;

ஒளிக்குள் ஆனந்தத்து
அமுதுஊறும் உள்ளத்தே.

—திருமூலர்

புனல் ஊறுமாபோல்: வாய் ஊறுமாப்போல. களிக்கும்: களிப்பூட்டும்.

அடிபேரில் பாதாளம்
பேரும்; அடிக்கண்

முடிபேரில் மாமுகடு
பேரும்;—கடகம்

மறிந்துஆடு கைபேரில்
வான்திசைகள் பேரும்

அறிந்துஆடும் ஆற்றாது அரங்கு.

—காரைக்காலம்மையார்

பேரில்: மாறினால். பாதாளம்: கீழுலகம். பேரும்: அசையும். அடிக்கண்: முகட்டின் கீழ்ப்பக்கம். கடகம்: தோள்வளை. மறித்து: தூக்கி. ஆற்றாது: தாங்காது. அரங்கு: சபை.

அழல்ஆட அங்கை
சிவந்ததோ! அங்கை

அழகால் அழல்
சிவந்தவாறே!—கழல்ஆடப்

பேயாடு கானில்
பிறங்க அனல்ஏந்தித்

தீயாடு வாய்இதனைச் செப்பு.

—காரைக்காலம்மையார்

அழல்: நெருப்பு. ஆட: நெருப்பைத்தூக்கிஆட. அம்கை: அழகியகை. கழல்: வீரச்சிலம்பு. கான்: காடு. பிறங்க: விளங்க அனல்: அக்கினி.

ஓடுகின்ற நீர்மை
ஒழிதலுமே உற்றாரும்

கோடுகின்றார்; மூப்பும்
குறுகிற்று;—நாடுகின்ற

நல்அச்சுஇற்று அம்பலமே
நண்ணாமுன் நல்நெஞ்சே

தில்லைச்சிற் றம்பலமே சேர்.

—ஐயடிகள் காடவர்கோன்

நீர்மை: தன்மை. உற்றார்: உறவினர், கோடுகின்றார்: மாறுபடுகின்றார். நல்அச்சு: நல்ல உடம்பு. இற்று: அழிந்து. அம்பலம்: மயானம்.

மொழியக்கண் டான்பழி; மூளக்கண்-
-டான்பிணி; முன்கைச்சங்கம்

அழியக்கண் டான்;அன்றில் ஈரக்கண்-
டான்;தென்றல் என்உயிர்மேல்

சுழியக்கண் டான்;துயர் கூரக்கண்-
-டான்;துகில் சூழ்கலையும்

கழியக்கண் டான்;தில்லைக் கண்நுத-
-லான்கண்ட கள்ளங்களே.

—சேரமான் பெருமாள் நாயனார்

இதுதலைவி கூற்று. பழி: அலர் தூற்றும் சொல். பிணி: காதல்நோய். சங்கம்: வளையல். அன்றில்: காதலை எழுப்பும் ஓர் பறவை. ஈர: பிளக்க. சுழிய: வீச. கூர: மிக. துகில்சூழ்கலை: சுற்றிய பட்டாடை. கழிய: நீங்க. கள்ளங்கள்: மாயங்கள்.

ஆவன யாரே அழிக்கவல்-
-லார்?அமை யாஉலகில்

போவன யாரே பொதியகிற்-
-பார்?புரம் மூன்றுஎரித்த

தேவனை, தில்லைச் சிவனைத்
திருந்துஅடி கைதொழுது

தீவினை யேன்இழந் தேன்;கலை-
-யோடு செறிவளையே.

—சேரமான் பெருமாள் நாயனார்

இதுவும் தலைவிகூற்று. ஆவன: ஆகக்கூடியவற்றை. போவன: போகத்தக்கவற்றை. பொதியகிற்பார்: சேர்த்து வைக்கவல்லார். கலை: ஆடை. செறிவளை: கூட்டமான வளையல்கள்.

அடிஒன்று பாதலம் ஏழிற்கும்
அப்புறம் பட்டது;இப்பால்

முடிஒன்றுஇவ் அண்டங்கள் எல்லாம்
கடந்தது; முற்றும்வெள்ளைப்

பொடிஒன்று தோள் எட்டுத் திக்கின்
புறத்தன; பூங்கரும்பின்

செடிஒன்று தில்லைச்சிற் றம்பலத்-
-தான்தன் திருநடமே.

—பட்டினத்துப்பிள்ளையார்

பாதலம் ஏழு: கீழுலகம் ஏழு. இப்பால்: இப்புறம். அண்டங்கள்: உலகங்கள். கடந்தது: அப்பால்சென்று விட்டது. வெள்ளைப்பொடி: திருநீறு. ஒன்று: பொருந்திய. திக்கின்புறத்தன: திக்குகளைக்கடந்தன. பூங்கரும்பின்செடி ஒன்றுதில்லை: அழகிய கரும்பு விளையும் சிதம்பரம்.

நாயனைய என்னைப்
பொருட்படுத்தி நன்களித்தது,

தாயனைய ஞய்அருளும்
தம்பிரான், — தூயவிரை

மென்துழாய் மாலொடுஅயன்
தேட வியன்தில்லை

மன்றுளே ஆடும்மணி.

—பட்டினத்துப்பிள்ளையார்

நன்குஅளித்து: நன்ருகக் காத்து. தாயனையஞய்: தாயைப் போன்றவஞய். தம்பிரான்: தலைவன். தூய: புனிதமான. விரை: மணம். மென்: மெல்லிய. வியன்: சிறந்த.

நெஞ்சம் திருவடிக் கீழ்வைத்து,
நீள்மலர்க் கண்பனிப்ப,

வஞ்சம் கடிந்துஉன்னை வந்தித்தி-
-லேன்;அன்று வானர்உய்ய

நஞ்சுஅங்கு அருந்து பெருந்தகை-
-யே!நல்ல தில்லைநின்ற

அம்செம் பவளவண் ணா!அருட்கு
யான்இனி யார்என்பரே.

—நம்பியாண்டார்நம்பி

மலர்க்கண்பனிப்ப: பூப்போன்ற கண்களில் நீர்வார. கடிந்து: நீக்கி. வந்தித்திலேன்: வணங்கமாட்டேன். வானர்: அமரர். உய்ய: கடைத்தேற. அருந்து பெருந்தகையே: குடித்த பெருமைமிக்கவனே.

நண்ணிய தீவினை நாசம்
செலுத்தி, நமன்உலகத்து

எண்ணினை நீக்கி, இமையோர்
உலகத்து இருக்கல்உற்றீர்!

பெண்ணினொர் பாகத்தன் சிற்றம்-
-பலத்துப் பெருநடனைக்

கண்இணை ஆர்தரக் கண்டு,கை
ஆரத் தொழுமின்களே.

—நம்பியாண்டார்நம்பி

நண்ணிய: பொருந்திய. நாசம்செலுத்தி: அழித்து, எண்: எண்ணிக்கை. இருக்கல்உற்றீர்: இருக்கின்றீர். கண்இணை: இரண்டு கண்கள். தில்லைக்கூத்தனைக் கை ஆரத்தொழுதால் தேவர் உலகில் இருத்தல் உறுதி என்பது கருத்து.

இன்னம்பல பலயோனியில்
எய்தாநெறி பெறவே,

முன்னம்பலர் அடிதேடவும்
முடிதேடவும் எட்டா,

அன்னம்பல பயில்வார்புனல்
அணிதில்லையுள் ஆடும்

பொன்னம்பல நாதன்கழல்
பொற்போடு பணிந்தான்.

—வில்லிபுத்தூராழ்வார்

பலபலயோனியில்: பலபலபிறவியில். பலர்: பிரமன், திருமால். வார்புனல்: நெடுநீர். கழல்: திருவடி. பார்த்தன் தலயாத்திரை வந்தபோது தில்லையை வணங்கிய பாடல்.

உண்மைஅறிவு ஆனந்த உருவாகி
எவ்உயிர்க்கும் உயிராய், நீரின்

தண்மை,அனல் வெம்மை,எனத் தனைஅகலாது
இருந்து,சரா சரங்கள் ஈன்ற

பெண்மைஉரு ஆகிய,தன் ஆனந்தக்-
-கொடி,மகிழ்ச்சி பெருக, யார்க்கும்

அண்மையதாய் அம்பலத்துள் ஆடிஅருள்
பேரொளியை அகத்துள் வைப்பாம்.

—பரஞ்சோதி முனிவர்

உண்மை, அறிவு, ஆனந்தம்: சச்சிதானந்தம். ஆனந்தக்கொடி: மகிழ்ச்சி வடிவான அம்பிகை. அண்மை: அணித்து.

சங்குஏந்தும் மலர்க்குடங்கைப் புத்தேளும்,
மறைக்கோவும், தழல்கால் சூலம்

அங்குஏந்தும் அம்மானும் தத்தமது
தொழில்தலைநின்று ஆற்றச் செய்துஒர்

பங்குஏந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்

கொங்குஏந்தும் மணிமன்றுள் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்.

—சிவஞான யோகிகள்

மலர்க்குடங்கை: பூப்போன்ற உள்ளங்கை. புத்தேன்: திருமால். மறைக்கோ: வேதத்தலைவன் (பிரமன்) தழல்கால்சூலம்: நெருப்பைக்கக்கும் திரிசூலம். பங்கு ஏந்தும் பெருமாட்டி: பார்வதி. இருமுனிவர்: பதஞ்சலி, வியாக்கிரபாதர். கொங்கு: மணம். பெருவாழ்வு: கூத்தப்பெருமான்.

அத்தனைச் சிற்றம் பலவனை,
என்உயிர் ஆகிநின்ற

சுத்தனை, சுத்த வெளியா-
-னவனைச் சுகவடிவாம்

நித்தனை, நித்த நிராதார-
-மாகிய நின்மலனை,

எத்தனை நாள்செல்லு மோமன-
-மேகண்டு இறைஞ்சுதற்கே.

—தாயுமானர்

சுத்தன்: தூய்மையானவன். நித்தன்: என்றும்உள்ளவன்.
நின்மலன்: அழுக்கற்றவன்.

சைவ சமய மேசமயம்,
சமயா தீதப் பழம்பொருளைக்

கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்

பொய்வந்து உழலும் சமயநெறி
புகுத வேண்டா; முத்திதரும்

தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே,

—தாயுமானர்

சமயாதீதம்: சமயம் கடந்த. கைவந்திட: அடைய. முத்திதரும் தெய்வசபை: திருச்சிற்றம்பலம். சேர வாரும்: எல்லோரும் திரண்டுவாருங்கள். செகத்தீரே: உலகத்தீரே.

அணிவளர் திருச்சிற் றம்பலத்து ஆடும்
ஆனந்த போகமே! அமுதே!

மணிவளர் ஒளியே! ஒளியின்உள் ஒளியே!
மன்னும்என் ஆருயிர்த் துணையே!

துணிவுறு சித்தாந் தப்பெரும் பொருளே!
தூயவே தாந்தத்தின் பயனே!

பணிவுறும் உளத்தே இனித்திட எனக்கே
பழுத்தபே ரானந்தப் பழமே!

—இராமலிங்கசுவாமிகள்

அணி: அழகு. மன்னும்: நிலைபெற்ற.

அருள்எலாம் அளித்த அம்பலத்து அமுதை,
அருட்பெரும் சோதியை, அரசை,

மருள்எலாம் தவிர்த்து வாழ்வித்த மருந்தை,
வள்ளலை, மாணிக்க மணியை,

பொருள்எலாம் கொடுத்துஎன் புந்தியில் கலந்த
புண்ணிய நிதியை,மெய்ப் பொருளை,

தெருள்எலாம் வல்ல சித்தை,மெய்ஞ் ஞான
தீபத்தைக் கண்டுகொண் டேனே.

—இராமலிங்கசுவாமிகள்

மருள்: மயக்கம். தவிர்த்து: நீக்கி. மருந்து: அமிழ்தம்.
புந்தி: புத்தி. நிதி: பொக்கிஷம். தெருள்: அறிவு.

எப்பொருளும், எவ்உயிரும், எவ்உலகும்
விளங்கவிளக்கு இடுவான் தன்னை,

செப்புஅரிய பெரியஒரு சிவபதியை,
சிவகதியை, சிவபோ கத்தை,

துப்புரவு பெறஎனக்கே அருள்அமுதம்
துணிந்துஅளித்த துணையை. என்தன்

அப்பனைச்சிற் றம்பலத்துஎன் அருட்பெரும்சோ
தியைப்பெற்றேன் அச்சோ! அச்சோ!

—இராமலிங்கசுவாமிகள்

சிவபதி: சிவனாகிய தலைவன். சிவகதி: சிவனாகிய புகலிடம். சிவபோகம்: சிவனாகிய இன்பம். துப்புரவு: தூயதன்மை. அச்சோ: வியப்புச் சொல்.

பேயினும் பெரியேன் செய்த
பிழைகளுக்கு எல்லை இல்லை;

ஆயினும் பொறுத்தாட் கொண்டாய்;
அம்பலத்து அரசே! என்தன்

தாயினும் இனிய! உன்தன்
தண்அருள் பெருமை தன்னை

நாயினும் கடையேன் எந்த
நலமறிந்து உரைப்பேன் அந்தோ!

—இராமலிங்கசுவாமிகள்

பேயினும் பெரியேன்; பேயைவிடப் பெரியவனாகியநான்.

கதிக்குவழி காட்டுகின்ற
கண்ணே!என் கண்ணில்
கலந்தமணி யே!மணியில்
கலந்தகதிர் ஒளியே!
விதிக்கும்உலகு உயிர்க்குஉயிராய்
விளங்குகின்ற சிவமே!
மெய்உணர்ந்தோர் கையகத்தே
விளங்கியதீங் கனியே!
மதிக்கும்மதிக்கு அப்புறம்போய்
வயங்குதனி நிலையே!
மறைமுடிஆ கமமுடிமேல்
வயங்கும்இன்ப நிறைவே!
துதிக்கும்அன்பர் தொழப்பொதுவில்
நடம்புரியும் அரசே!
சொல்மாலை சூட்டுகின்றேன்;
தோளில்அணிந்து அருளே!

—இராமலிங்கசுவாமிகள்

கதிக்கு: உய்வுக்கு. மதிக்கும்மதி: அறியும்அறிவு.

இன்புறநான் எய்ப்புஇடத்தே
பெற்றபெரு வைப்பே!
ஏங்கியபோது என்தன்னைத்
தாங்கிய நல்துணையே!
அன்புறஎன் உள்கலந்தே
அண்ணிக்கும் அமுதே!
அச்சம்எலாம் தவிர்த்துஎன்னை
ஆட்கொண்ட குருவே!
என்பருவம் குறியாதே
எனைமணந்த பதியே!
இச்சைஉற்ற படிஎல்லாம்
எனக்குஅருளும் துரையே!
துன்புஅறமெய் அன்பருக்கே
பொதுநடம்செய் அரசே!
தூயதிரு அடிகளுக்குஎன்
சொல்லும்அணிந்து அருளே.

—இராமலிங்கசுவாமிகள்

எய்ப்பு: நலிவு. வைப்பு: சேமநிதி.

கோடையிலே இளைப்பாற்றிக்
கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே!
நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த
சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற
மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே!
சுகத்தில்உறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த
மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே!என்
அலங்கல்அணிந்து அருளே.

—இராமலிங்கசுவாமிகள்

ஆடையிலே: ஆடும்போது. மணவாளா!: கணவா! அலங்கல்: மாலை.

பணிந்துஅறியேன்; அன்புடனே
பாடுதலும் அறியேன்;
படித்துஅறியேன்; கேட்டுஅறியேன்;
பத்தியில்பூ மாலை
அணிந்துஅறியேன்; மனம்உருகக்
கண்களில்நீர் பெருக
அழுதுஅறியேன்; தொழுதுஅறியேன்;
அகங்காரம் சிறிதும்
தணிந்துஅறியேன்; தயவுஅறியேன்;
சத்தியவா சகமும்
தான்அறியேன்; உழுந்துஅடித்த
தடியதுபோல் இருந்தேன்;
துணிந்துஎனக்கும் கருணைசெய்த
துரையே!என் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற
சித்தசிகா மணியே!

—இராமலிங்கசுவாமிகள்

பத்தியில்: பக்தியோடு தடி: உலக்கை.

பொய்கொடுத்த மனமாயைச்
சேற்றில்விழாது எனக்கே
பொன்மணிமே டையிலேறிப்
புந்திமகிழ்ந்து இருக்கக்

கைகொடுத்தீர்! உலகமெலாம்
களிக்கஉல வாத
கால்இரண்டும் கொடுத்தீர்!எக்
காலும்அழி யாத

மெய்கொடுக்க வேண்டும்;உமை
விடமாட்டேன் கண்டீர்!
மேலேறி னேன்;இனிக்கீழ்
விழைந்துஇறங்கேன்; என்றும்

மைகொடுத்த விழிஅம்மை
சிவகாம வல்லி
மகிழநடம் புரிகின்றீர்!
வந்துஅருள்வீர்! விரைந்தே.

—இராமலிங்கசுவாமிகள்

கைகொடுத்தீர்: தூக்கிவிட்டீர். உலகமெலாம் களிக்க: உலகமெலாம் கண்டுகளிக்க. உலவாத: அயராத. எக்காலும்: எப்பொழுதும்.

சத்தியமாம் தனித்தெய்வம்;
தடைஅறியாத் தெய்வம்;
சத்திகளெல் லாம்விளங்கத்
தானோங்கும் தெய்வம்;

நித்திய,தன் மயமாகி
நின்றதெய்வம்; எல்லா
நிலைகளும்தன் அருள்வெளியில்
நிலைக்கவைத்த தெய்வம்;

பத்திவலைப் படுகின்ற
தெய்வம்;எனக்கு எல்லாப்
பரிசும்அளித்து அழியாத
பதத்தில்வைத்த தெய்வம்;

சித்திஎலாம் தரும்தெய்வம்;
சித்தாந்தத் தெய்வம்;
சிறசபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம்.

—இராமலிங்கசுவாமிகள்

தனி: ஒப்பற்ற. பதம்: பதவி.

உலகெ லாம்உணர்ந்து
ஓதற்கு அரியவன்;

நிலவுஉ லாவிய
நீர்மலி வேணியன்;

அலகுஇல் சோதியன்;
அம்பலத்து ஆடுவான்;

மலர்சி லம்புஅடி
வாழ்த்தி வணங்குவாம்.

—சேக்கிழார்

நீர்: கங்கை. வேணி: சடை. அலகு: கணக்கு. மலர்சிலம்பு அடி: மலர்கின்ற சிலம்பணிந்த திருவடி.

ஆதியாய் நடுவும் ஆகி,
அளவிலா அளவும் ஆகிச்

சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும் ஆகிப்

பேதியா ஏகம் ஆகிப்
பெண்ணுமாய் ஆணும் ஆகிப்

போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி! போற்றி!

—சேக்கிழார்

பேதியாஏகம்: பிரிக்கமுடியாத ஒன்று. போதியாநிற்கும்: அறிவுபுகட்டி நிற்கும்.

கற்பனை கடந்த சோதி,
கருணையே உருவம் ஆகி

அற்புதக் கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்

சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று

பொற்புடன் நடம்செய் கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி!

—சேக்கிழார்

கோலம்: அழகு. மறைச்சிரம்: வேதத்தின் உச்சி.
பொற்பு: அழகு.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்

சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக,

இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்,

வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

—சேக்கிழார்

இது, சுந்தரர் தில்லையை வணங்கிய முறை. ஐந்து பேரறிவு: மெய் வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலனால் அறியப்படும் அறிவு. கரணங்கள் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம். இந்து: சந்திரன்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்! 'உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று,

மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம்' என்று,

கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்

பண்ணினுல் நீடி அறிவரும் பதிகம்
பாடினுர்; பரவினுர்; பணிந்தார்.

—சேக்கிழார்

தெண்ணிலா: தெளிந்த சந்திரன். வாலிதாம்இன்பம்: பேரின்பம். பண்: இசை. இதுவும் சுந்தரர் தில்லையை வணங்கிய முறை.

''அரியானை'' என்றுஎடுத்தே அடியவருக்கு
எளியானை, அவர்தம் சிந்தை

பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந்-
-தமிழ்பாடிப் பிறங்கு சோதி

விரியாநின்று எவ்வுலகும் விளங்கியபொன்
அம்பலத்து மேவி ஆடல்

புரியாநின்று அவர்தம்மைப் பணிந்துதமி-
-ழால்பின்னும் போற்றல் செய்வார்.

—சேக்கிழார்

இது, அப்பர் சுவாமிகள் தில்லையை வணங்கிய முறை. ''அரியானை'' என்று எடுத்து: ''அரியானை'' என்ற தேவாரத்தைத் தொடங்கி.

அண்ண லார்தமக்கு அளித்தமெஞ் ஞானமே
ஆன அம்பல முத்தம்

உள்நி றைந்தஞா னத்துஎழும் ஆனந்த
ஒருபெ ரும்தனிக் கூத்தும்,

கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டுஎழும்
களிப்பொ டும்கடற் காழிப்

புண்ணி யக்கொழுந்து அனையவர் போற்றுவார்
புனிதர் ஆடிய பொற்பு.

—சேக்கிழார்.

இது, திருஞானசம்பந்தர் தில்லையை வணங்கிய முறை. அண்ணலார்: ஞானசம்பந்தர். கண்ணின்: கண்ணி னுல். காழி: சீர்காழி நகரம். புண்ணியக்கொழுந்து: சம்பந்தர். புனிதர்: தில்லைக்கூத்தர். பொற்பு: அழகு.

மெய்யன்பர் மனத்துஅன்பின்
விளைந்தஇசைக் குழலோசை

வையம்தன் னையும்நிறைத்து
வானம்தன் வயமாக்கிப்

பொய்அன்புக்கு எட்டாத
பொற்பொதுவில் நடம்புரியும்

ஐயன்தன் திருச்செவியின்
அருகுஅணையப் பெருகியதால்.

—சேக்கிழார்

இப்பாடல், ஆனாயநாயனார் குழலோசையைச் சிறப்பித்துக் கூறுவது. மெய்யன்பர்: ஆனாயர். பொற்பொது: அழகிய சிற்றம்பலம். ஐயன்: கூத்தப்பெருமான். அருகணையப் பெருகியது: அணித்தே சென்று பெருக்கெடுத்து ஓடியது.

சொல்லுவது அறியேன் வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!

வல்லைவந்து அருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி!

எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்குஅருள் செய்தாய் போற்றி!

தில்லைஅம் பலத்துள் ஆடும்
சேவடி போற்றி! போற்றி!!

—சேக்கிழார்

வல்லை: விரைந்து. எல்லையில்: அளவில்லாத. சேவடி: சிவந்ததிருவடி.

என்றும் இன்பம்
பெருகும் இயல்பினால்

ஒன்று காதலித்து
உள்ளமும் ஓங்கிட

மன்று ளார்அடி-
-யாரவர் வான்புகழ்

நின்றது எங்கும்
நிலவி உலகலாம்

—சேக்கிழார்

ஒன்று காதலித்து: பெருகிய காதலோடு. மன்றுளார்: அம்பலத்துஆடுவார். அடியார்: திருத்தொண்டர். வான்புகழ்: சிறந்த இசை. இது திருமுறையில் கடைசித்திருமுறையாகிய பன்னிரண்டாம் திருமுறை என்னும் பெரியபுராணத்தின் இறுதிப் பாட்டு. "உலகெலாம்" என்று தொடங்கி, "உலகெலாம்" என்று முடிகிறது.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு முதற்குறிப்பு அகராதி (தொடர்ச்சி)

பாட்டு முதற்குறிப்பு அகராதி (தொடர்ச்சி)

திருமகள் அச்சகம்

காரைக்குடி.